வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் மலர்விழி

தேதி 4.4.2024 நேரம் மாலை 6.10 மணி

-----------------------------------------------------------------

தலைப்புச் செய்திகள்

குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு இன்று மும்பை ஐஐடி- உயர்கல்வி நிறுவனத்தில், புற்று நோய்க்கான, அதிநவீன செல் சிகிச்சை வசதியைத் தொடக்கி வைத்தார்.

இந்தியாவை முன்னேறிய நாடாக மேம்படுத்த, தேசிய ஜனநாயக கூட்டணி அரசு, எல்லா முயற்சிகளையும் எடுத்து வருவதாக, பிரதமரும், மூத்த பிஜேபி தலைவருமான திரு நரேந்திர மோடி கூறி உள்ளார்.

மூத்த காங்கிரஸ் தலைவர் திருமதி சோனியாகாந்தி, மத்திய அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் ஆகியோர், மாநிலங்களவை உறுப்பினர்களாக, இன்று பதவி ஏற்றுக் கொண்டனர்.

கேரளா-கர்நாடகா உட்பட 12 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களைச் சேர்ந்த 88 மக்களவைத் தொகுதிகளில், வேட்புமனு தாக்கல், இன்றுடன் முடிவிற்கு வந்துள்ளது.

முர்மு

புற்று நோய்க்கு சிகிச்சை அளிக்க. முற்றிலும் இந்தியாவிலேயே உருவாக்கப்பட்ட, அதிநவீன CAR-T செல் சிகிச்சை வசதியை, இன்று மும்பை ஐஐடி உயர்கல்வி நிறுவனத்தில், குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு, தொடக்கி வைத்தார். அனைவருக்கும், குறைந்த கட்டணத்தில் எளிதில் கிடைக்கும் வகையிலான இப்புதிய சிகிச்சையினால் மனித குலத்திற்கே

பெரிய நம்பிக்கை ஏற்பட்டுள்ளதாக அவர் கூறினார். அதிநவீன சிகிச்சை வசதிகள் கொண்ட ஒரு சில நாடுகளின் பட்டியலில் தற்போது இந்தியா இணைந்து இருப்பதாகவும், இந்தியாவின் இந்த முதலாவது மரபணு சிகிச்சை வசதி, எண்ணற்ற புற்று நோயாளிகளுக்கு புது வாழ்வு அளிப்பதில் வெற்றிகரமாகத் திகழும் என தாம் நம்புவதாகவும் அவர் கூறினார். கல்வி நிறுவனங்களுக்கும் தொழில் துறையினருக்கும் இடையிலான ஒத்துழைப்புத் திட்டத்தின் கீழ், மும்பை ஐஐடி உயர்கல்வி நிறுவனமும், டாடா நினைவு மருத்துவ மையமும் இணைந்து உருவாக்கி உள்ள இப்புதிய சிகிச்சை வசதியின் தொடக்க விழாவில் மகாராஷ்டிர ஆளுநர் திரு ரமேஷ் பைஸ், மும்பை-ஐஐடி இயக்குநர் பேராசிரியர் சுபாஷிஸ் சௌத்ரி, டாடா நினைவு மருத்துவ மையத்தின் இயக்குநர் பேராசிரியர் சுதீப் குப்தா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

தன்கர்

குடியரசு துணைத் தலைவர் திரு ஜெகதீப் தன்கர் இன்று புதுடெல்லி நாடாளுமன்ற வளாகத்தில், ராஜஸ்தான் மாநிலம் தோல்பூர் ராஷ்ட்டிரிய ராணுவப் பள்ளி மாணவர்களுடன் கலந்துரையாடினார். மாநிலங்களவைச் செயலகத்தின் ஏற்பாட்டில், 3 நாள் கல்விப் பயணமாக, இம்மாணவர்கள் டெல்லி வந்து இருப்பதாக, சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

மோடி

இந்தியாவை முன்னேறிய நாடாக மேம்படுத்த, தேசிய ஜனநாயக கூட்டணி அரசு, எல்லா முயற்சிகளையும் எடுத்து வருவதாக, பிரதமரும், மூத்த பிஜேபி தலைவருமான திரு நரேந்திர மோடி கூறி உள்ளார். நடப்பு மக்களவை தேர்தலும் இந்தியாவை முன்னேறிய நாடாக மேம்படுத்துவதற்கான தேர்தல் தான் என்று, அவர் இன்று பீகார் மாநிலம் ஜமுயி பகுதியில் தேர்தல் பிரச்சாரப் பொதுக் கூட்டம் ஒன்றில் பேசுகையில் கூறினார். நிலவின் தென் துருவத்தில் விண்கலம் ஒன்றை வெற்றிகரமாக தரை இறக்கிய முதல் நாடாகவும், உலகின் 5-ஆவது பெரிய பொருளாதாரமாகவும் இந்தியா மேம்பட்டுள்ளதாக திரு நரேந்திர மோடி தெரிவித்தார். இன்றைய பீகாரை உள்ளடக்கிய மகதப் பேரரசின் பழம் பெருமைகளை மீட்க, பிஜேபி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி அரசு முக்கியத் துவம் அளிப்பதாக அவர் கூறினார். இந்தியா தற்போது, தீவிரவாதிகளுக்கு தக்க பதிலடி கொடுப்பதாக தெரிவித்த

அவர், கோதுமைக்கே அல்லாடும் சிறு நாடுகளில் இருந்து கூட தீவிரவாதிகள் நம்மைத் தாக்க முடியும் என்ற நிலை தற்போது இல்லை என்றார். முந்தைய காங்கிரஸ் ஆட்சியில் பலவீனமான நாடாக திகழ்ந்த இந்தியா, கடந்த 10 ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட திடமான கொள்கை முடிவுகளால், உலக அரங்கில் வலுவான நாடாக மேம்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். அயோத்தியில் ராமர் கோவில் கட்டியதன் மூலம், பக்தர்களின் 500 ஆண்டு கனவை தமது அரசு நிறைவேற்றி இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். பீகார் மாநிலம் ஜமுயி மக்களவைத் தொகுதியில், லோக் ஜனசக்தி கட்சியின் ராம்விலாஸ் பிரிவைச் சேர்ந்த திரு சிராக் பாஸ்வான், தேசிய ஜனநாயக கூட்டணி வேட்பாளராக போட்டியிடுகிறார்.

பீகாரைத் தொடர்ந்து மேற்கு வங்க மாநிலம் கூச்பிகார் பகுதியிலும் திரு நரேந்திர மோடி இன்று பிற்பகல் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டார். இத்தொகுதியில் மத்திய இணை அமைச்சர் திரு நிசித் பிரமாணிக், பிஜேபி வேட்பாளராக போட்டியிடுகிறார்.

*பிஜேபி தேர்தல் அறிக்கை*

பாரதிய ஜனதா கட்சியின் **தேர்தல் அறிக்கை** குழு, அதன் தலைவரும் மத்திய அமைச்சருமான திரு ராஜ்நாத் சிங் தலைமையில் இன்று புதுடெல்லியில் கூடி, மக்களவை தேர்தலுக்கான கட்சியின் தேர்தல் அறிக்கையை இறுதி செய்வது குறித்து விவாதித்தது. **27 உறுப்பினர் தேர்தல் அறிக்கை** குழுவின் இந்த இரண்டாவது கூட்டத்தில், திருமதி நிர்மலா சீதாராமன், திரு அஸ்வினி வைஷ்ணவ், திரு கிரண் ரிஜிஜு உள்ளிட்ட மூத்த தலைவர்கள் கலந்து கொண்டனர்.

*அனுராக் தாக்கூர்*

மத்திய தகவல்-ஒலிபரப்பு அமைச்சரும், மூத்த பிஜேபி தலைவருமான திரு அனுராக் தாக்கூர், இன்று **பெங்களூர்-தெற்கு மக்களவைத் தொகுதியில்,** பிஜேபி வேட்பாளர் திரு **தேஜஸ்வி** சூர்யாவின், வேட்புமனு தாக்கல் பேரணியில் கலந்து கொண்டார். மும்பைக்கு அடுத்தபடியாக நாட்டிலேயே **வரி வருவாய் அதிகம் உள்ள** நகரம் பெங்களூர் தான் என்றும் காங்கிரஸ் கட்சியின் ஓராண்டு கால ஆட்சியில், பெங்களூர், கடும் **நீர்த் தட்டுப்பாட்டை** சந்திப்பதாகவும் அவர் தெரிவித்தார். பிரதமர் திரு நரேந்திர மோடியின் 10

ஆண்டுகால ஆட்சியில், நாடு முழுவதும் 25 கோடி மக்கள் வறுமையில் இருந்து மீட்கப் பட்டுள்ளதாகவும், விரைவுச் சாலை, மெட்ரோ ரயில், விமான நிலையம் உள்ளிட்ட போக்குவரத்து வசதிகள், பல மடங்கு அதிகரித்து இருப்பதாகவும் அவர் கூறினார்.

*சோனியா*

மூத்த காங்கிரஸ் தலைவர் திருமதி சோனியாகாந்தி, மத்திய அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் ஆகியோர், மாநிலங்களவை உறுப்பினர்களாக இன்று பதவி ஏற்றுக் கொண்டனர். இவர்களுக்கும், புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட வேறு 12 மாநிலங்களவை உறுப்பினர்களுக்கும், மாநிலங்களவை தலைவர் திரு ஜெகதீப் தன்கர், பதவிப் பிரமாணம் செய்து வைத்தார். பாரதிய ஜனதாவைச் சேர்ந்த திரு ஆர் பி என் சிங், ஐக்கிய ஜனதா தளத்தைச் சேர்ந்த திரு எஸ் கே ஜா, காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த திரு அஜய் மாக்கன் ஆகியோரும் இதில் அடங்குவர்.

*இரண்டாம் கட்டம்*

கேரளா-கர்நாடகா உட்பட 12 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களைச் சேர்ந்த 88 மக்களவைத் தொகுதிகளில், **வேட்புமனு தாக்கல்** இன்றுடன் முடிவிற்கு வந்துள்ளது. இந்த 2-ஆம் கட்டத்தில், கேரளத்தில் 20 தொகுதியிலும், கர்நாடகத்தில் 14, ராஜஸ்தானில் 13, மகாராஷ்டிரா மற்றும் உத்தர பிரதேசத்தில் தலா 8, மத்திய பிரதேசத்தில் 7, அசாம் மற்றும் பீகாரில் தலா 5, சட்டீஸ்கர் மற்றும் மேற்குவங்கத்தில் தலா 3 தொகுதியிலும், மணிப்பூர், திரிபுரா மற்றும் ஜம்மு-காஷ்மீரில் தலா ஒரு தொகுதியிலும், வாக்குப் பதிவு நடைபெறும். ஜம்மு-காஷ்மீரில் நாளை மறுநாளும், இதர தொகுதிகளில் நாளையும், **வேட்புமனு பரிசீலனை** நடைபெற உள்ளது.

*வீட்டு ஓட்டு*

மூத்த குடிமக்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகள் வீட்டில் இருந்தே வாக்களிக்கும் வசதியை தேர்தல் ஆணையம் அறிமுகப்படுத்தி உள்ளது. நாடு முழுவதும், 85 வயதிற்கு மேற்பட்ட, சுமார் 82 லட்சம் மூத்த குடிமக்களும், உடல் ஊனம் 40 சதவிகிதத்திற்கு மேல் உள்ள, சுமார் 88 லட்சம் மாற்றுத் திறனாளிகளும் இதனால் பயன் பெறுவார்கள் என மதிப்பிடப் பட்டுள்ளது. இதுஅல்லாது, வாக்காளர் பதிவு முதல், தேர்தல் நடைமுறைகளின் ஒவ்வொரு கட்டத்திலும் மாற்றுத் திறனாளிகளுக்கு உதவ, saksham App என்ற பெயரில்

மொபைல் செயலி ஒன்றையும் தேர்தல் ஆணையம் செயல்படுத்தி வருகிறது. வாக்குச் சாவடிகளில், வாக்களிக்க வரும் மாற்றுத் திறனாளிகளுக்கு சக்கர நாற்காலி உள்ளிட்ட வசதிகளையும், தன்னார்வலர்கள் மூலம் தேவையான உதவிகளையும் வழங்க, ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அனைவரையும் உள்ளடக்கிய ஜனநாயகத்தை சாதிக்கும் வகையில், **ஒவ்வொரு ஓட்டும் முக்கியம்** என்ற அடிப்படையில், தேர்தல் ஆணையம், இந்நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

*புதுச்சேரி-வீட்டு ஓட்டு*

இதற்கிடையே, புதுச்சேரி மக்களவைத் தொகுதியில் வீட்டிலிருந்தே வாக்களிக்க, மாற்றுத் திறனாளிகள் மற்றும் மூத்த குடிமக்கள் 2 ஆயிரத்து 878 பேர் அனுமதி பெற்றுள்ளனர். இவர்கள், வீட்டிலிருந்தே வாக்களிக்கும் நடைமுறைகள், புதுச்சேரி, ஏனாம் மற்றும் மாகே பகுதிகளில் கடந்த 2-ஆம் தேதியும், காரைக்காலில் இன்றைய தினமும் தொடங்கி உள்ளன. வரும் 6-ஆம் தேதி வரை இப்பணிகள் நடைபெறும். தமிழகத்தின் 39 மக்களவைத் தொகுதிகளில் வரும் 18-ஆம் தேதி வரை இப்பணிகள் நடைபெறும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

*குலோத்துங்கன்*

புதுச்சேரியில், **ஓட்டுக்கு பணம் பெறும் சம்பவங்கள்** குறித்து வாக்காளர்கள், **சி-விஜில்** செயலி மூலமாகவோ, அல்லது, 19 50 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண்ணிலோ, புகார் பதிவு செய்யலாம் என்று மாவட்ட தேர்தல் அதிகாரியும், மாவட்ட ஆட்சியருமான திரு குலோத்துங்கன் தெரிவித்துள்ளார். பணம்-பொருள் கொடுத்தோ, அதிகாரம் அல்லது அச்சுறுத்தல் மூலமாகவோ ஓட்டுக்களைப் பெற முயல்வது, சட்டப் படி குற்றம் என்றும், இத்தகைய சட்டவிரோத முயற்சிகள் மற்றும் தூண்டுதல்களை, தேர்தல் ஆணையம் சகித்துக் கொள்ளாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

*அடையாள ஆவணம்*

புதுச்சேரியில் வரும் 19-ஆம் தேதி தேர்தல் நாளன்று, வாக்காளர்கள் தத்தம் வாக்குச் சாவடிகளில் வாக்களிக்க, **புகைப்பட வாக்காளர் அடையாள அட்டையை** காட்ட வேண்டும் என மாவட்ட தேர்தல் அதிகாரி அலுவகம் அறிவித்துள்ளது. ஆயினும் வாக்காளர் அட்டையை காட்ட முடியாத

பட்சத்தில், ஆதார் அட்டை, பேன் அட்டை, ஓட்டுனர் உரிமம், பாஸ்போர்ட் உள்ளிட்ட 12 **மாற்று ஆவண**ங்களில், ஏதேனும் ஒன்றைக் காட்டி வாக்களிக்கலாம் என அறிவிக்கப் பட்டுள்ளது. மகாத்மா காந்தி ஊரக வேலை உறுதியளிப்பு திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட **வேலை அட்டை**, புகைப்படத்துடன் கூடிய **வங்கிக் கணக்கு புத்தகம்** ஆகியனவும், இந்த 12 **மாற்று ஆவண**ங்களில் அடங்கும்.

*தபால் வாக்கு*

தேர்தல் பணியில் ஈடுபடக் கூடிய, தகுதி உள்ள அலுவலர்கள் அனைவரும், உரிய **வாக்காளர் வசதி மையத்**தில், தாபல் வாக்குகளை செலுத்தலாம் என்று தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது. அரசு ஊழியர்கள் **தபால் ஓட்டுப்** போட முடியாது என்று சமூக ஊடகத்தில் வெளியாகி உள்ள செய்திகள் தவறானவை என்றும் ஆணையம் கூறி உள்ளது. இத்தகைய தவறான செய்திகள் குறித்து மக்கள் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் என்றும் உண்மையான தகவல்களை அறிய, தேர்தல் ஆணையத்தின அதிகாரப்பூர்வ இணைய தளத்தை அணுகலாம் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

*மீனவர்*

கடந்த மாதம் 6-ஆம் தேதி இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்ட காரைக்கால் மற்றும் தமிழக மீனவர்கள் 19 பேர், இருநாட்டு தூதரக அதிகாரிகளின் பேச்சு வார்த்தை மூலம் விடுவிக்கப் பட்டதைத் தொடர்ந்து இன்று சென்னை விமான நிலையம் வந்தடைந்தனர். தமிழக அரசால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வாகனங்களில், இவர்கள் பின்னர், அவரவர் சொந்த ஊர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

*வானிலை*

தமிழகத்தில் ஒரு சில இடங்களிலும், புதுவையிலும் அதிகபட்ச வெப்பநிலை அடுத்த 5 நாட்களில், இயல்பை விட 2 முதல் 3 டிகிரி **செல்சியஸ்** அதிகமாக இருக்கும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. கடலோரப் பகுதிகளில், 34 முதல் 37 டிகிரி வரையிலும், உள் மாவட்டங்களின் சமவெளிப் பகுதிகளில், 37 முதல் 39 டிகிரி வரையிலும், வெப்பநிலை பதிவாகலாம் என எதிர்பார்க்கப் படுகிறது. வெப்பநிலை மற்றும்

ஈரப்பதம் அதிகமாக இருக்கும் போது **அசௌகரியம்** ஏற்படலாம் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

தென்னிந்தியப் பகுதிகளின் மேல், வளிமண்டல கீழடுக்குகளில், **காற்றின் திசை மாறுபடும் பகுதி** நிலவுவதால், வரும் **8-முதல் 10-ஆம் தேதி வரை**, புதுச்சேரி காரைக்கால் மற்றும் கடலோர மாவட்டங்களில், மிதமான மழை பெய்யக் கூடும் என்றும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

*ஐபிஎல்*

ஐபிஎல் கிரிக்கெட்டில், இன்று இரவு 7.30 மணிக்கு அகமதாபாத்தில் நடைபெறும் போட்டியில், **குஜராத்-பஞ்சாப் அணிகள்** மோத உள்ளன. நேற்று இரவு, **டெல்லி-கொல்கத்தா** அணிகளுக்கு இடையே. விசாகப் பட்டிணத்தில் நடைபெற்றப் போட்டியில், **கொல்கத்தா அணி**, 106 ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

*பள்ளி வாகனம்*

தமிழகத்தில் பள்ளி வாகனங்களை இயக்குவதற்கான புதிய வழிகாட்டு நெறிமுறைகளை பள்ளிக் கல்வித் துறை இன்று வெளியிட்டுள்ளது. இதன்படி, பள்ளி வாகனங்களில் இனி பெண் உதவியாளர் ஒருவர் கட்டாயம் இருக்க வேண்டும் என அறிவுறுத்தப் பட்டுள்ளது. வாகனங்களில், மாணவிகளுக்கு எதிராக பாலியல் குற்றங்கள் நடப்பதை தடுக்கும் வகையில் இந்த உத்தரவு பிறப்பிக்கப் பட்டுள்ளது.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு இன்று மும்பை ஐஐடி- உயர்கல்வி நிறுவனத்தில், புற்று நோய்க்கான, அதிநவீன **செல் சிகிச்சை வசதியைத்** தொடக்கி வைத்தார்.

இந்தியாவை முன்னேறிய நாடாக மேம்படுத்த, **தேசிய ஜனநாயக கூட்டணி அரசு**, எல்லா முயற்சிகளையும் எடுத்து வருவதாக, பிரதமரும், மூத்த பிஜேபி தலைவருமான திரு நரேந்திர மோடி கூறி உள்ளார்.

மூத்த காங்கிரஸ் தலைவர் திருமதி சோனியாகாந்தி, மத்திய அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் ஆகியோர், மாநிலங்களவை உறுப்பினர்களாக, இன்று பதவி ஏற்றுக் கொண்டனர்.

கேரளா-கர்நாடகா உட்பட 12 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களைச் சேர்ந்த 88 மக்களவைத் தொகுதிகளில், வேட்புமனு தாக்கல், இன்றுடன் முடிவிற்கு வந்துள்ளது.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.

Puducherry/Reg.Bulletin/Tamil/18.10hrs/ 4.4.2024/Script.

-----------------------------